DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.83/2024 | Deposition of Witness for : PW2 |
| Name : சுமா | Father/Husband Name : நயினார் |
| Age : 38 | Village : மாணாட்டுர் |
| Taluk : ஏரல் | Calling : கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07 April 2026.
Accused absent. Petition U/s.317 Cr.P.C/355 BNSS filed and allowed.

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது மாணாட்டுரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியும். அ.சா.1 ஐ தெரியும். கடந்த 29.10.2023 அன்று மாலை 5.30 மணியளவில் அ.சா.1 க்கும் எதிரிக்கும் கழிவு நீர் விடுவது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டது. அப்போது எதிரி மாடுகளை பத்திக்கொண்டு அவரது வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார். அப்போது கழிவு நீரை ஏன் என்னுடைய வீட்டிற்கு முன்னால் விடுகிறீர்கள் என்று அ.சா.1 எதிரியிடம் கேட்டார். அதற்கு எதிரி அ.சா.1 ஐ சவுக்கு கம்பால் அவரது முன்பக்க தலையில் ஓங்கி அடித்தார். அதனால் அவருக்கு காயம் ஏற்பட்டது. அங்கு வந்த அ.சா.1 ன் மனைவி தாழ்ந்த சாதியை சேர்ந்தவர் என்பதால் அவரையும் மிகவும் தரகுறைவாக எதிரி அவரது சாதியைக் குறித்து பேசினார். அவரது மனைவியை வேறு ஆண் நபர்களுடன் தொடர்புபடுத்தியும் மிகவும் அறுவறுக்கத்தக்க வகையில் பேசினார். அதனால் அவருக்கு மன உளைச்சல் ஏற்பட்டது. காயம்பட்ட அ.சா.1 ஐ ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றோம். என்னுடைய வீடு எதிரியின் வீட்டின் அருகில் இருப்பதால் வழக்கு சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். இதுசம்பந்தமாக அ.சா.1 புகார் வாக்குமூலம் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

2. அ.சா.1 க்கு நான் சித்தி என்றால் சரிதான். நான் வேலை பார்க்கிறேனா அல்லது வீட்டில் இருக்கிறேனா என்றால் விவசாயம் பார்க்கிறேன், இந்த சம்பவம் நடைபெற்றபோது நான் 100 நாள் வேலை திட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன், சம்பவம் நடைபெற்ற தினம் ஞாயிற்றுக்கிழமை என்பதால் அன்று விடுமுறை எனவே வீட்டில் இருந்தேன். நான் 100 நாள் வேலை திட்டத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்துவந்தாலும் விடுமுறை நாட்களில் விவசாய வேலைக்கும் செல்வேன் என்றால் சரிதான். நான் விவசாய வேலைக்கு செல்லும்போது மாலை 6 மணிக்கு அப்புறம் தான் வீட்டிற்கு வருவேன் என்றால்

 DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.04.07 17:37:10 +0530 

சரியல்ல, மதியம் 3 மணியளவில் வீட்டிற்கு வந்துவிடுவேன். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் எதிரியின் கணவரை அ.சா.1, முத்துமுருகன், ஆறுமுகநயினார் ஆகியோர்கள் அரிவாளால் வெட்டி அவருக்கு கையில் ஊனம் ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவருக்கு அடிபட்ட விபரம் தெரியும், ஆனால் அ.சா.1, முத்துமுருகன், ஆறுமுகநயினார் ஆகியோர்கள் அரிவாளால் வெட்டினார்கள் என்ற விபரம் தெரியாது. அந்த வழக்கு சம்பந்தமாக மேற்கூறிய மூன்று நபர்கள் மீது ஒரு வழக்கு ஏற்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், முத்து முருகன் என்பவர் வழக்கு சம்பவம் நடைபெற்றபோது அவரது வீட்டில் இல்லை, அவரது மனைவியின் உறவினர் வீட்டில் ஒரு நிகழ்ச்சி என்பதால் அவர் அங்கு சென்றுவிட்டார். அந்த வழக்கிற்காகத்தான் மேற்கூறிய 3 பேரும் ஆஜர் ஆகியுள்ளார் என்றால் சரிதான், எதிரியின் கணவருக்கு ஊனம் எதுவும் இல்லை, அவர் நன்றாகத்தான் இருந்து வருகிறார், அனைத்து வேலைகளையும் செய்கிறார், இந்த சம்பவம் நடைபெற்றபோது அ.சா.1 ஐ எதிரி அடிக்கவந்தபோது அதை தடுக்க வந்ததால் அதில் தள்ளுமுள்ளு ஏற்பட்டதால் அவரது வீட்டின் கேட் கம்பியின் மீது விழுந்ததால் அவருக்கு அடி ஏற்பட்டது. எதிரியின் கணவருக்கு அடிபட்ட போது ஏற்பட்ட சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றால் சரிதான். எதிரியின் கணவரை மேற்கூறிய 3 நபர்கள் தாக்கியதுதான் உண்மையான சம்பவம் என்றாலும் அ.சா.1 என்னுடைய மகன் உறவு முறை என்பதால் அவர் அளித்த பொய் வாக்குமூலத்திற்கு கண்ணால் பார்த்தாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளபடி எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.04.07 17:37:15 +0530

Judicial Magistrate, Sathankulam.